விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 05 வியாழக்கிழமை (21.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 267




# இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியாவினால் தான் தீர்வு!

## கூட்டமைப்பினர் புதுடில்லியில் வலியுறுத்தல்

(புதுடில்லி)



இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியாவினால்தான் தீர்வுகாண முடியும். இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்கும் வரலாற்று ரீதியான உறவு உள்ளது என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி சென்றுள்ள கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று அங்கு ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே சம்பந்தன் இதனைத் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் மோதல் இரு இராணுவத்தினர் பலி

சுன்னாகம் நகரப் பகுதியில் இராணுவத்தினருக்கும் ஆயுததாரிகளுக்குமிடையில் நேற்று மதியம் துப்பாக்கித் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இதில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தினையடுத்து நகரப் பகுதியில் பொருள் கொள்வனவுக்காக வந்த மக்கள் பதறியடித்தவாறு ஓட்டம் எடுத்தனர். வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன.

இதேவேளை இத் தாக்குதல் சம்பவத்தினையடுத்து அப் பகுதியில் மேலதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. எவரும் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படவில்லை. (ச-5)

## முகமாலையை நோக்கி பரஸ்பரம் எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

முகமாலையில் விடுதலைப் புலிகளின் பகுதிகள் நோக்கி இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலைவரை பல்குழல் மற்றும் ஆட்லறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலுக்குப் பதில் தாக்குதலாக விடுதலைப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப் படையினர் சூட்டில் 14 முஸ்லிம்கள் படுகாயம் !

### பதற்றத்தை தணிக்க ஊரடங்கு அமுல்

(அம்பாறை)

அம்பாறை உல்லைப் பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 14 முஸ்லிம்கள் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் நான்கு பேர் ஆபத்தான நிலைமையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்றும் முழு அடைப்புப்போராட்டம் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றது.

இப் போராட்டத்தை நிறுத்தி உல்லைப் பகுதியில் கடைகளைத் திறக்குமாறு சிறப்பு அதிரடிப்படையினர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## உலக உணவுத்திட்டத்தின் பணி யாழ்ப்பாணத்தில் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தமது பணிகளை நிறுத்துவதாக உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

யாழில் அரசாங்கமே மக்களுக்கான நிவாரணப் பணிகளை வழங்கும் என்றும் உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் 11ஆம் திகதி வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரசேதங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. ஐ.நா. மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சில பணிகள் மட்டுமே செயற்படுகின்றன.

அரசாங்கத்தின் நடவடிக்கையால் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண பகுதிகளில் எமது பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. கிழக்கில் மட்டும் நடைபெற்று வருகின்றன.

தற்போது மட்டக்களப்பு பிரதேசத்தில் பாதுகாப்பு நிலைமை (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து உலகத் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு



(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உலகத் தலைவர்களை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நோர்வேப் பிரதமர், அமெரிக்க ஜனாதிபதி மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி உள்ளிட்டோரை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேசியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 61 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்ற போது ஜனாதிபதி இச் சந்திப்புக்களில் ஈடுபட்டார்.

சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர்களை படையில் சேர்த்தல் தொடர்பான ஐ.நாவுக்கான இலங்கை பிரதிநிதி ராதிகா குமாரசுவாமியை ஜனாதிபதி நேற்று முன்தினம் சந்தித்து உரையாடினார்.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ஐ.நா.தலைமையகத்தில் சுவிஸ் ஜனாதிபதி மொரிடிஸ் லியோன் பேக்கரை சந்தித்து இரு நாடுகளின் உறவுகள் பற்றி ஜனாதிபதி கலந்துரையாடினார்.

நேற்று முன்தினம் 11 மணியளவில் ஐ.நா வின் 61 ஆவது அமர்வில் ஜனாதிபதி கலந்து கொண்டார். அமெரிக்க மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் இந்த அமர்வில் கலந்து கொண்டனர்.

ஆரம்ப அமர்வுகளுக்குப் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்சின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ (04 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்தில் ராணுவ ஆட்சி

(பாங்கொங்)

தாய்லாந்தில் இராணுவ ஆட்சி அமுல் படுத்தப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் பிரதமர் தக்சின் சிமெத்ரா ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றிருந்த வேளை அந்நாட்டு இராணுவம், அரச அலுவலகங்களை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன. பாங்கொங்கிலுள்ள முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

பிரதமர் தக்சினுக்கும் அவரது எதிர்ப்பாளர்களுக்குமிடையே தீர்க்க முடியாத பிரச்சனைகள் ஏற்பட்டதன் காரணமாக மோதலும் குழப்பமும் நாட்டில் ஏற்பட்டதால் இராணுவம் தலையிட வேண்டியதாயிற்று என இராணுவதளபதி சோனாதி புண்ணியோரெட்டிக் தெரிவித்துள்ளார். புதிய ஜனநாயக ஆட்சி நடைமுறைப்படுத்தப்படுமென அவர் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி முகாம்களுக்கு நடமாடும் வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் தேவைகள் தொடர்பாகவும் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுது.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில், பிரதி மாகாணப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இக்கலந்துரையாடல் இடம் பெற்றது.

நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற மக்களின் குடிநீர் விநியோகம், சத்துணவு விநியோகம், மலசல கூடவசதிகள் என்பன தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

இதேவேளை நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களின் நலன்கருதி நடமாடும் மருத்துவ சேவைகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. அம்மக்களுக்கு தேவையான நுளம்பு வலைகளை வழங்குவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளதாக யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப்பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச-133)

# நூலகர் சேவைக்கான தடைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண நூலகர் சேவை தரம் 111 மற்றும் தரம் 11 இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரிட்சைக்கான விண்ணப்பங்கள் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவினால் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை ஒக்டோபர் 06ம் திகதிக்கு முன் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இதற்கான விளம்பரங்களை யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ச)

# புங்குடுதீவுக்கான பஸ்சேவை ஒருவாரமாக இடம்பெறவில்லை

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகள் புங்குடுதீவுப் பகுதிக்கு மேற்கொள்ளப்படாமையினால் அரச உத்தியோகஸ்தர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

டீசல் பற்றாக்குறையினை அடுத்து அப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சேவை மட்டும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.எனினும் கடந்த ஒரு வாரகாலமாக அச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவுக்குச் செல்லும் அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேறு இடங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவை வழமைபோன்று மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் புங்குடுதீவுக்கான சேவை புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அரச உத்தியோகஸ்தர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகருக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் நேற்று மட்டும் இடம்பெறவில்லை எனவும் ஏனைய இடங்களுக்கான சேவைகள் இடம்பெற்றதாகவும் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை அனைத்து பிரதேசங்களுக்குமான தனியார் வான்சேவைகள் வழமை போன்று இடம் பெற்றாலும் அச்சேவையை நம்பி பயணத்தைத் தொடர முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-133)



அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதியுடன் சென்ற சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கைலாகு கொடுப்பதைக் படத்தில் காணலாம்.

# தமிழ் வர்த்தகர் கைது

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு உதவியதாக தன்கொடுவவிலில் தமிழ் வர்த்தகர் ஒருவரை அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

தென்னிலங்கைக்கு ஆயுதங்களை கடத்த புலிகளுக்கு உதவினார் என்பதற்காக கைதுசெய்தோம் என்று அதிரடிப்படையின் அதிகாரி அஜித் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தன்கொடுவவில் அப்பளம் மற்றும் நூடில்ஸ் தொழிற்சாலையை அந்த வர்த்தகர் நடத்திவந்தார் என தெரியவருகிறது. (ச)

# குழந்தைகளுக்குத் தேவையான சத்துணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, சத்துணவுகள் வழங்கப்படுகின்றது.

இருப்பிலுள்ள கோண் சோயா தலா 2 கிலோ வீதம் வழங்கப்பட்டு வருவதாக யாழ் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அரசசார்பற்ற நிறுவனங்களினால் குழந்தைகளுக்குத் தேவையான பால்மா மற்றும் தாய்மார்களுக்குத் தேவையான சத்துணவுகள் என்பன வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்கு 3மாதங்களுக்குத் தேவையான கோண் சோயா எடுத்து வரப்படவுள்ளது.யாழ்ப்பாணத்திற்கு வரும் அடுத்த கப்பலில் இப்பொருள் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-133)

# முஸ்லிம் படுகொலை விசாரணைக்கு வெளிநாட்டவர்கள் தேவையில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(அம்பாறை)

அம்பாறையில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலான விசாரணைக்கு சர்வதேச வல்லுநர்கள் உதவி தேவையில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பாதுகாப்பு பேச்சாளர் கேலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

அம்பாறை படுகொலை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில் சர்தேச வல்லுநர்களின் உதவி தேவையில்லை.

அரசாங்கத்தின் சார்பில் சர்வதேச வல்லுநர்களின் உதவியைக் கோரும் அதிகாரம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுக்குக் கிடையாது. வெளிநாட்டவர் தலையீடின்றி நீதியான விசாரணைகளை நாங்களே நடத்துவோம். இது விடயத்தில் அரசாங்கம் திறந்த மனதுடன் உள்ளது. கடந்த கால நடவடிக்கைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் மீது நாம் நேரடியாக குற்றம் சாட்டினோம்.

இப்படுகொலைக்கு விடுதலைப் புலிகள் காரணமில்லை என்று நம்புவோர் விசாரணைக்களுக்காக காத்திருக்க வேண்டும். எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் வெளிநாட்டவரை அழைக்கும் ஒரு புதிய அணுகுமுறை இப்போது உருவாகி வருகிறது. வெளிநாட்டவருக்கு இணையாக வல்லுநர்கள் இங்கே உள்ளனர் என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர்.

இதேபோன்ற விசாரணைகளை பலமுறை நாம் முன்னர் நடத்தியிருக்கிறோம். முக்கிய சம்பவங்களைத் தவிர இதர சம்பவங்களுக்கு வெளி நாட்டவர் உதவி தேவையில்லை என்றார் (ச-5)

# கொழும்புத் தினக்குரல் அலுவலகம் இராணுவத்தினரால் சோதனை

கொழும்பில் உள்ள தினக்குரல் நாளிதழ் தலைமை அலுவலகத்தில் இராணுவத்தினர் நேற்று சோதனை மேற்கொண்டனர்.

இச்சோதனை நடவடிக்கை மாலை 4.30 மணி முதல் சுமார் 20 நிமிடம் வரை நீடித்தது. தினக்குரல் நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனங்களும் களஞ்சிய சாலையும் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

இருப்பினும் தினக்குரல் ஆசிரியர் பகுதிக்குள்ளோ ஏனைய நிர்வாகப் பகுதிகளுக்குள்ளேயே இராணுவத்தினர் நுழையவில்லை எனவும் கூறப்படுகிறது. (ச-5)

# ஈழத்தமிழர்களின் ஏற்பாட்டில் லண்டனில் உலக சமாதான நிகழ்வு

(லண்டன்)

ஐ.நா சபையின் அனுசரணையுடன் உலகெங்கும் நடைபெற உள்ள உலக சமாதான நாள் நிகழ்வுகள் லண்டனில் இன்று ஈழத்தமிழர்களால் நடத்தப்பட உள்ளன.

பிரித்தானியா வாழ் தமிழீழ மக்களை ஒன்றிணைத்து கரோ கவுன்சிலர் தயா இடைக்காடர் தலைமையிலான பிரித்தானியா தமிழ் கவுன்சிலர் அமைப்பு இப் பாரிய ஒன்று கூடலை ஏற்பாடு செய்துள்ளது.

லண்டன் உள்ளூராட்சிப் பகுதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் 33 உள்ளூராட்சி மன்றங்களின் முன்பும் இந்த ஒன்று கூடல் நடைபெற இருக்கிறது.

ஒன்று கூடல் நிகழ்வானது நண்பகல் 12.00 மணிக்கு தொடங்கி இரவு 8.00 மணிவரை நடைபெற உள்ளது. (ச)

# நிவாரணப் பொருட்கள் விநியோகம்

இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் இன்று முதல் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக வழங்கப்படவுள்ளன.

இப்பொருட்கள் பங்கீட்டளவில் வழங்கப்படவுள்ளதால் அனைவரும் கிடைக்கும் எனவும் பொருட்களைப் பெறுவதற்கு முண்டியடிக்க வேண்டாமெனவும் கேட்கப்பட்டுள்ளது. (ச-133)

# முஸ்லிம்களின் படுகொலைக்கு தமிழ்க் கூட்டமைப்பு கண்டனம்

அம்பாறையில் முஸ்லிம்களை படுகொலை செய்தமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.பத்மநாபன் கண்டனம் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

அம்பாறை பொத்துவில் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடத்திலே மோதலை உருவாக்குவதற்காக இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட கொடூர வன்முறைச்சம்பவம் இது. இருந்த போதும் மக்கள் இதனைப் புரிந்து கொண்டுள்ளனர்.

மேலும் அரசாங்கமே இப்படுகொலைக்கு முழுப்பொறுப்பேற்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நாட்டினது மக்கள் பாதிக்கப்படும் போது பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் தங்களது சொந்த அரசியல் லாபங்களுக்காக இத்தகைய நிகழ்வுகளைப் பயன்படுத்தாமல் பாதிக்கப்பட்ட இனம் அல்லது மதத்தினருக்கு அநீதி இழைத்தமை தொடர்பிலான உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்றார் அவர். (ச)

# இரத்ததானம்

பகவான் ஸ்ரீசத்திய சாயி பாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட இரத்தான நிகழ்வு தொடர்பாக யாழ் பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களினால் இரத்தம் சேகரிக்கப்படவுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் ஒரு உண்மையைக் கண்டு பிடித்தான் என்றால் இருட்டறையில் ஒரு தீபத்தை ஏற்றினான் என்று பொருள்.

*-இங்கர்சால்*

வலம்புரி

# இலங்கைத் திருநாட்டை அழிக்க அமெரிக்காவின் ஆயுத உதவி

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க அமெரிக்கா தயாராக இருப்பதாக அந்நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ரொபட் ஒ ப்ளக் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வது அமெரிக்காவின் பரம்பரைத் தொழில்.

வறிய நாடுகளில் சண்டைகளைத் தூண்டி விட்டு பின்னர் அந்த நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வது அமெரிக்காவின் வேலையாக இருக்கின்றது.

உலகில் சண்டை நடைபெறும் எந்த நாட்டை எடுத்தாலும் அங்கு அமெரிக்காவின் பின்னணி இருப்பதை அறிய முடிகிறது. இதுவே யதார்த்தம்.

இந் நிலையில் இலங்கை அரசுக்கும் அன்று முதல் இன்று வரை ஆயுதங்களை விநியோகித்து வரும் அமெரிக்காக இப்போது புதுக்கதை சொல்கிறது.

அதாவது பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக இலங்கைக்கு ஆயுத உதவி வழங்கத் தாம் தயாராக இருப்பதாக அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதம் எது ? உரிமைப்போராட்டம் எது? என்பன அமெரிக்காவின் கழுகுக்கண்களுக்கு தெரியாவிடினும் இனப்பிரச்சினை நிலவுகின்ற இலங்கைத் தீவுக்கு ஆயுதங்களை வழங்கி அழகிய இலங்காபுரியை அழிப்பதே அமெரிக்காவின் சதித்திட்டம் என்பதை அரசும் மக்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்படுகிறது.

இஸ்ரேல், பாகிஸ்தான்,பிரிட்டன், அமெரிக்கா என ஊதாரித்தனம் விளைவிக்கும் நாடுகள் ஆயுதங்களை தாராளமாகக் கொடுத்தும் விற்றும் ... பயங்கரவாதம் இன்னும் ஒழிந்ததாக இல்லை.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவிப்பதன் ஊடாக அந்த நாட்டின் கபடத்தனம் வெளிப்படுகிறதல்லவா?

தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் இதில் யார் உயிரிழந்தாலும் அது இந்த நாட்டிற்கு இழப்பு என்ற உண்மை உணரப்படவேண்டும்.

எல்லா இன மக்களும் இந்த மண்ணில் நிம்மதியாக -சுதந்திரமாக ஒற்றுமையாக வாழ வேண்டும்.

2002 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சிங்கள மக்கள் தமிழர்களின் அவல நிலை கண்டு கலங்கினர்.

அதே நேரத்தில் விவசாய அமைச்சராக இருந்த ர்ாஜித சேனாரட்ன, தென்மராட்சியின் அழிவுகளை வியட்நாம் யுத்தத்தின் அழிவுகளோடு ஒப்பிட்டார்.

ஜனாதிபதியாக இருந்த திருமதி சந்திரிகா குமாரதுங்க, இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு என்ன விலை கொடுத்தும் தீர்வு காணவேண்டுமென்றார்.

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்; யுத்தம் அழிவையே தரும் என்றார்.

இவ்வாறு எல்லா இன மக்களும் இலங்கை இனப்பிரச்சினை சமாதானத்தின் வழியில் தீர்க்கப்படும் என எண்ணும்போது அமெரிக்கா இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க முற்படுவது பயங்கரவாதத்தை ஒழிக்கவா? அல்லது இலங்கையை அழித்துவிடவா?

ஆட்சியாளர்களே இதற்கான விடையை கண்டறிய வேண்டும்

# பயண ஒழுங்கை ஏற்படுத்தித் தருமாறு பல்கலை மாணவர்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்ட பல்கலைக்கழக மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்வதற்கு போக்குவரத்து ஒழுங்கு ஏற்படுத்தித்தருமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் துணை வேந்தரைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தற்போது நிலவும் நெருக்கடி சூழ்நிலை காரணமாக தடைப்பட்டுள்ள இயல்புப் போக்குவரத்தினால் எமது வெளிமாவட்ட மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பமுடியாமல் உள்ளனர்.

அவர்கள் இங்கு பாதுகாப்பு உள்ளிட்ட உணவு மற்றும் சுகாதார பிரச்சினைகள் பலவற்றை எதிர்கொண்டவண்ணம் உள்ளனர்.தற்போது நோய்வாய்ப்பட்ட நிலையில் சில மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பல மாணவர்கள் உடல், உளநிலை பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளனர். எனவே தயவுசெய்து உரிய தரப்பினர்களோடு தொடர்பு கொண்டு எமது மாணவர்களின் போக்குவரத்துத் தேவை நிறைவுசெய்யும் வண்ணம் மிகத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம் என்றுள்ளது. (ச)

# சமாதானத்தை ஏற்படுத்த பேருளைப் பேணிநிற்போம்

## உலக சமாதானத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

சர்வதேச சமூகங்கள் உன்னிப்பாக ...ளமகிழ்வோடு கொண்டாடும் தினம் உலக சமாதான தினம். இத்தினத்தைச் சென்ற வருடம் ஊடகங்களூடாக பணியகச் செயற்பாட்டையும்,சமாதானத் தேவையையும் பிரதிபலிக்கும் விளம்பரங்கள் செய்யப்பட்டன.

எல்லாவற்றிக்கும் மேலாக மக்களின் உள்ளக்கிடக்கை, சமாதான சகவாழ்வின் வேணாவா, வேட்கை பிஞ்சு உள்ளங்கள் முதல் பெரியவர்வரை வெளிக் கொணரப்பட்டன. அதுவே பணியகப் பயணத்தின் வெற்றிக்கு சங்குநாதம் மியற்றின. மனம் நிறைவடைந்தது.

ஆயின் இவ்வருடமோ அரசியல் தளம்பல், உரிமை மறுப்பு, தேசியஇனத்தின் ஒன்றான தமிழர்களின் குரல் வளையை இறுகப்பற்றி நெரிக்கத் தொடங்கிவிட்டது. சுதந்திரக்காற்றைச் சுகமாகச் சுவாசிக்கும் நிலையை மாற்றி மூச்சுத் திணறவைத்து விட்டது.

நாளும் வகை தொகையின்றி உயிர்கள் பறிக்கப்படுகின்றன. காணாமல்போவோர் தொகை காரணமின்றிக் கணத்தில் பெருகின்றது. யுத்த முனைப்பால் ஏதிலிகளாக இடம்பெயர்வோர் தொகை அதிகரித்து நிற்கின்றது. இருப்பிடங்களை விட்டு மரநிழலிலும், பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் பட்டினிச்சாவை எதிர்கொண்டு ஒதுங்கும் கன்றிய முகங்கள், ஒளியிழந்து நிற்கின்றன். இந்நிலையில் சமாதானத்தினையோ வாரத்தையோ கொண்டாடும் நிலையில் நாமில்லை; நம் மக்களில்லை. சமாதான வாழ்வு மக்களுக்கே. அந்த வகையில் தனிமரம் தோப்பாக நாம் நிற்பது அர்த்தமில்லையே.

எனினும் தளராத உள்ளங்கள்; எதையும் தாங்கும் இதயங்கள் எதிர்கால நல்விடியலை எதிர்கொள்ளக் காத்திருக்கின்றன. இவ்வருடம் இனித்தமாய், சமாதான தினத்தைக்கொண்டாட எண்ணங் கொண்டுள்ளது. எம்பணியகம்.

வாழும் நெறிமுறைக்கு நாளும் உழைக்கின்ற நிறுவனத்தின் குரல் இந்த சமாதான தினத்தில் ஒலிக்க வேண்டுமென்கின்ற உந்துதல் எம்மை முன்னே தள்ளுகிறது. சமதர்மம் பேணமறுக்கின்ற, ஜனநாயகத்தை உதட்டளவில் அசைபோடுகின்ற துர்ப்பாக்கிய சூழலில் பெறுமதி மிக்க உயிரினம் தவிக்கின்ற வேளை இது. சுதந்திரத்தின் பொருள்கள் அறிய முத்துக்குளிக்கும் இருள் கவிந்த காலமும் இதுவே?

பிறப்பின் பெறுமதியை காலச்சக்கரத்தின் நிலையை,பாரம்பரியத்தின் பெருமையைக் காணத் துடிக்கின்ற வேளையில் வேதனைச்சாயல் வெதுப்புகிறது. மக்கள் உள்ளங்களை. இந்த வேளையிற்தான் சமாதானத்தின் பெறுமதியைப் பேணிக்காக்க வேண்டுமென்கின்ற செயலுரு தோன்றுகிறது.

இன்றுவரை சமாதானத்தில் நம்பிக்கை வைத்து உழைக்கின்ற உள்ளங்கள் பல. அரசியற் சக்தியால் இந்நிலை அலைப்புண்டு அலைக்கழிக்கப்படுகிறது. பிறர் தமர் பார்க்கும் பேதமையால் அல்லாடும் சமாதானம் அருகில் வரவேண்டும் என்ற உறுதியான உழைப்பாளிகள் நாம்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற பொதுமறைக் கருத்தை மேலாக மதித்து மனிதகுல அவலங்களைக் கேட்டு ஆறுதல் கூறி,நெறிப்படுத்தும் செயற்பாட்டில் முனைந்து நிற்பவர்கள் நாம்?

காலச் சூழ்நிலையால் அரசியல் பேதங்களால் பிறப்புரிமை பொசுக்கப்பட்டு; பிறந்த பொன்நாட்டின் நினைவு மறுக்கப்பட்டு, ஏதலிவாழ்வு விதைக்கப்பட்ட காலம் இது. கண்ணீரில் நனைந்து கருத்துக்கள் கரைவது மட்டுமல்ல; செந்நீரில் மிதந்து சிதைந்து போகின்ற வாழும் உயிர்களின் அவலம் உள்ளத்தை பிளக்கிறது. உணர்வலைகள் தத்தளிக்கின்றன.

என்றும் எம்மை நேசக்கரம் நீட்டி வாழ்விக்கின்ற இறைநிலை பேறாக இருக்கின்ற காரணத்தால் இன்றும் இருக்கின்ற பல உயிர்கள் அவை துன்பம் தோய்ந்தவையாக துயரம் கொண்டவையாக எத்தனை காலம் தான் வாழமுடியும் என்பதைத்தீர்க்கும் பொறுப்பு பேரருட் பெம்மானுக்குரியதாகும்.

அன்பினால்,அருளால், அணைக்கும் கரத்தின் பான்மையால் சமாதானம் சாகவில்லை நலிந்து போய் இருக்கிறது.இருள் கவிந்து போயிருக்கிறது. மீட்சிக்கு வழியுண்டு; வகையுண்டு என்ற தொலைநோக்கு எங்களுக்கு உண்டு. அந்த நெறியில் எங்கள் நிறுவன உழைப்பும் - உற்சாகமும் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும் என இச்சமாதான நாளில் சிந்தை கொள்வோம். நொந்த உள்ளங்கள் நோவல சொந்த நிலம் சோபிக்க, உறுதியும் உழைப்பும் தளைத் தோங்க இறையருள் வேண்டுவம் இந்நாளிலே. எங்களுக்கும் சமரசம் உலவிட சமாதானம் பிறக்கட்டும்,என பேரருளை பேணிநிற்போம்.

*அருட்திரு ஜே.ஜே.பேணாட் அடிகளார்*
*சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியக இயக்குநர்*

# புரத உணவு உட்கொள்ளாமையால் மக்களின் ஆரோக்கியம் பாதிப்பு

## உதவி விவசாய பணிப்பாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையின் காரணமாக மக்களின் பிரதான உணவுகளில் மிக முக்கியமான புரத உணவு உட்கொள்ளல் வீதம் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்கள் சுமார் 60- 70 வீதமானோர் சராசரி மட்டத்தில் அல்லது அதற்கு கீழ்நிலையிலேயே வாழ்க்கை நடத்துகின்றனர் என யாழ்.உதவி விவசாய பணிப்பாளர் கி.சிறீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் மக்களின் பிரதான விலங்குணவாக கடல் மீன் கிடைப்பது அரிதான நிலையில் ஏனைய விலங்கு உணவான இறைச்சி, முட்டை, பால் என்பனவும் சராசரி குடும்பத்தவர்களால் வாங்க முடியாத மிகவும் அரிதான நிலை காணப்படுகிறது.

இதனால் பெரும்பாலான மக்கள் அன்றாட உணவில் புரதம் உட்கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது.

இதனால் குழந்தைகள், வளர்பராயத்தினர், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோர் பாரியளவில் பாதிப்பை எதிர் நோக்க வேண்டியவர்களாகின்றனர்.

எனவே மக்கள் அனைவரும் தங்களுடைய வீடுகளில் அதிகூடிய தரமுள்ள புரத உணவுப்பயிரான இராணி அவரையை வளர்க்க முன்வரவேண்டும்.

இராணி அவரையானது ஒரு வகைக் கொடிப்பயிராக உள்ளதுடன் இதன் காய், விதை, இலை ,கிழங்கு அனைத்தையும் உணவாக உட்கொள்ள முடியும்.அத்துடன் மிகக் குறைந்த நீர்த்தேவை உள்ள பயிராகையால் இலகுவாக வீடுகளில் செய்கை பண்ணலாம்.ஒவ்வொரு வீடுகளிலும் இரு கொடிகளாவது வளர்த்து வீட்டுக்குத்தேவையான நிறைவான புரதத்தை குறைந்த காலத்தில் இலகு வாகப் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, யுனிசெவ் அமைப்பின் பிரதிநிதி, நோர்வேப் பிரதமர் ,சுவிஸ்லாந்து ஜனாதிபதி ஆகியோரை சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# படுகொலைகளை விசாரிக்க சர்வதேச கண்காணிப்புக்குழு ஐ.நா.பிரதிநிதி அரசிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் படுகொலை குறித்து சர்வதேச கண்காணிப்புக் குழுவை அனுப்ப வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பிலான அமைப்பின் பிரதிநிதி பிலிப் ஆல்ஸ்டன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் அவர் இது குறித்துப்பேசியுள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதல்கள் மீளத் தொடங்கியுள்ள நிலையில் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் நடைபெறுகின்றன.

அரசாங்கம், விடுதலைப் புலிகள் மற் றும் இதர ஆயுதக்குழுக்கள் தங்களுக்குப் பொறுப்பில்லை என்று மறுத்தாலும் படுகொலைகள் தொடர்கின்றன.சுதந்திரமான பேச்சு, சுதந்திரமாக கூடுதல்,அரசியல் பங்கேற்பு மறுக்கப்பட்டு பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர்' எனவும் அவர் கூறினார். (ச)

# எரிக்சொல் ஹெய்ம் இலங்கைக்கு வரார்!

(கொழும்பு)

நோர்வே அமைச்சரும் சமாதானத் தூதுவருமான எரிக்சொல் ஹெய்ம் மற்றும் சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்ஸன் பௌயர் ஆகிய இருவரும் தற்போதைக்கு இலக்கைக்கு வரமாட்டார்கள் என நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எரிக்சொல் ஹெய்ம் மற்றும் ஜோன் ஹான்ஸன் பௌயர் ஆகியோர் இம் மாதம் இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக கடந்த சில நாட்களாக வதந்தி பரவியுள்ளது.

ஆனால் அப்படியானதொரு திட்டமும் இல்லை என நோர்வே தூதுரகப் பேச்சாளர் எரிக் நியூரென் பாக் கூறியுள்ளார்.

அதற்காக அவர்கள் எதிர்காலத்தில் வரமாட்டார்கள் என்று அர்த்தமில்லை என்றும் தற்போது வருவதற்கான திட்டமில்லை என்றும் கூறினார்.

இதனிடையே இலங்கைக்கு யப்பான் சிறப்புத்தூதுவர் யசூசி அகாஷி வருகைதருவதை கொழும்பில் உள்ள யப்பானியத் தூதரகம் உறுதிசெய்துள்ளது. (ச)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு....

இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் அஹமதுவை புதுடில்லி சென்றுள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்துப் பேசினர்.

மேலும் புதிதாக பொறுப்பேற்கவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சிவசங்கர் மேனனையும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் ஈழத்தமிழரின் துயரங்கள் குறித்தும் இந்திய அமைச்சர் மற்றும் செயலாளருக்குத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் விளக்கியுள்ளனர்.

முன்னதாக சர்வதேச விவகாரங்களுக்கான இந்திய சபையின் கருத்தரங்கிலும் அவர்கள் கலந்து கொண்டனர். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், மாவை.சேனாதிராசா ,கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ,சுரேஷ்பிரேமச்சந்திரன் உள்ளிட்டோர் புதுடில்லி சென்றுள்ளனர்.

புதுடில்லியில் ஊடகவியலாளர்களிடம் இரா.சம்பந்தன் பேசியதாவது,இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியாவினால் தான் தீர்வுகாண முடியும். இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்கும் வரலாற்று ரீதியான உறவுள்ளது.

இலங்கையும் இந்தியாவும் துடுப்பாட்டப் போட்டியில் மோதினால்கூட இந்தியாவை நாம் ஆதரிக்கிறோம். 99 வீதமான தமிழர்கள் இந்தியாவினால் தான் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமென நம்புகின்றனர்.வேறு எந்த நாட்டினால் இதனைச் செய்ய முடியும்? வேறு எந்த நாட்டாலும் செய்யமுடியாது. எமக்கு இந்தியா மீது பாசமுண்டு என்றார் இரா.சம்பந்தன்.

மேலும் அரசாங்கத்தினால் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கையினால் உருவாகியுள்ள மனித அவலங்களை அவர் விளக்கினார்.

ஊடகவியலாளர்களிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியதாவது, இந்தியாவுடன் ஈழத்தமிழர்களுக்கு நெருக்கமான உறவு உண்டு. இது வரலாற்று உண்மை. இலங்கை இனப்பிரச்சினையின் மூல காரணத்தை இந்தியாவினால் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும்.

எமது துன்பங்கள் தொடர்பில் இந்தியாவினால்தான் அனுதாபம்கொள்ள முடியும் என்றார். இந்தியப் பிரதமருடனான சந்திப்பு இன்று வியாழக்கிழமை நடைபெறக்கூடும் என்று புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

# மேலும் இரு கப்பல்களில் அரிசி அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியப் பொருட்களுடன் மேலும் இரண்டு கப்பல்கள் யாழ் நோக்கிப் புறப்படவுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி. திவாரட்ண தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் பொருட்கள் ஏற்றப்பட்டிருக்கும் முதலாவது கப்பல் எதிர்வரும் 25ம் திகதி காங்கேசன்துறையை நோக்கிப் புறப்படும்.

மற்றொரு கப்பல் 30 திகதி புறப்படும் என ஆணையாளர்தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அரிசிக்குத்தட்டுப்பாடு நிலவுவதால் இரு கப்பல்களிலும் அரிசியே அதிகம் அனுப்பப்படும் எனவும்அவர் தெரிவித்தார்.

இதேவேளை தனியாருக்கான பொருட்களை அனுப்புவது குறித்து ஆலோசனை நடைபெற்று வருவதாகவும் விரைவில் அவர்களுக்கான பொருட்கள் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

# தீவகத்திற்கான பாதை நேற்றும் மூடப்பட்டது

தீவகத்திற்கு செல்ல நேற்றும் கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர். வேலணையில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்றதாகக் கூறப்படும் மோதல் சம்பவத்தினையடுத்து அங்கு பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாகவே தீவகத்திற்கான போக்குவரத்திற்கு தடைவிதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை நீண்ட நேரமாகக் காத்திருந்த தீவக அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பயண அனுமதி கிடைக்காத நிலையில் வீடுகளுக்கு திரும்பிச் சென்றனர். (ச-5)

# முகமாலையை...

புலிகளும் ஏறிகணைத்தாக்கு தல்களை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடை யே மோதல் சம்பவங்களும் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ச-5)

# உலக...

மோசமடைந்துள்ள மையால் வாகரை பிரதேச மக்களுக்கான பணிகளும் குறைக்கப்பட்டுள்ளன.

இதனால் யாழ்.மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக தெரிய வருகிறது. இதேவேளை யாழ்.பணிகளை இடைநிறுத்துவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வல்லிபுரமாழ்வாருக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வல்லிபுரமாழ்வார் ஆலய கொடியேற்றம் இன்று நடைபெறவுள்ளது. தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 5ம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் சமுத்திரத் திருவிழாவும் நடைபெறும். (ச)

# இலங்கையின் சமாதான...

வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டார்.

ஜனநாயகத்தில் நீண்ட நாள் நிலைத்திருக்கும் நாடுகள் என்ற அடிப்படையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இம் மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தன.

வளர்ந்து வரும் ஜனநாயக நாடுகள் என்ற வகையில் ஆபிரிக்க, தென்ன மரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இம் மாநாட்டில் கலந்து கொண்டன.

அபிவிருத்தியடைந்து வரும் இந்த நாடுகளில் ஜனநாயகத்தைத் தொடர்ந்தும் பாதுகாப்பது எப்படி என்பது தொடர்பான முக்கிய விடயங்கள் இங்கே ஆராயப் பட்டன.

அத்துடன் இந்த நாடுகள் எதிர்நோக்கும் பயங்கரவாத பிரச்சினைகளை எவ்வாறு வெற்றிகொள்வது என்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

நோர்வேப்பிரதமரை ஜனாதிபதி மகிந்த சந்தித்து இலங்கையின் சமாதான முயற்சிகள் பற்றி கலந்துரையாடினார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தமது அரசு எப்போதும் தயாராக இருப்பதாகவும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு புலிகளை அழைத்து வருமாறு ஜனாதிபதி கோரிக்கைவிடுத்தார் என்றும் கூறப்பட்டது.

சமாதான முன்னெடுப்பில் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள ஆர்வத்தை நோர்வே ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு தலைவரின் சில அறிக்கைகளை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாக நோர்வேக்கு ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நோர்வேயும் இலங்கையும் இறைமையுள்ள இரண்டு நாடுகள் என்ற வகையில் இரு நாடுகளின் தொடர்புகள் சமாதான இலக்கை மட்டும் மட்டுப்படுத்தாது, தொடர்ந்தும் வியாபிக்கவேண்டும் என்றும் இரு நாட்டுத்தலைவர்களும் இணக்கம் கண்டனர்.

நேற்று முன்தினமிரவு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வழங்கிய விருந்துபசாரத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். (ச-5)

# அதிரடிப் படையினர்...

கோரிக்கை விடுத்துள்ளனர்.ஆனால் வர்த்தகர்கள் கடைகளை திறக்க மறுத்தனர்.

கடைகளைத் திறக்க மறுத்த முஸ்லிம் வர்த்தகர்களை சிறப்பு அதிரடிப்படையினர் தாக்கத் தொடங்கினர். இதனால் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து சிறப்பு அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 14 முஸ்லிம்கள் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த 10 பேர் பொத்துவில் மருத்துவமையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம்கள் படுகொலைக்குக் காரணமான சிறப்பு அதிரடிப்படை அதிகாரியே நீக்கவேண்டும் அல்லது இராத்தல் குளம் பகுதி சாஸ்திரவெளி சிறப்பு அதிரடிப்படை முகாமையே நீக்கவேண்டும் என்று அம் மக்கள் கோரி வருகின்றனர்.

சிறப்பு அதிரடிப்படை முகாமை அகற்ற வேண்டுமென்று பொத்துவில் மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர்ந்து போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

இதனையடுத்து பதற்றம் நிலவிவருவதால் பொத்துவில் பிரதேசத்தில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவை சிறப்பு அதிரடிப்படையினர் பிறப்பித்துள்ளனர்.

அக்கரைப்பற்று, ஆலயடிவேம்பு, திருக்கோயில்,தம்புவில் ஆகிய தமிழர் பகுதிகளிலும் நேற்று முழு அடைப்புப்போராட்டம் நடத்தப்பட்டது. அம்பாறை மாவட்டம் முழுமையும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org